

சென்னை வட கிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்றது. புழல் ஒன்றியக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் முன்னிலையில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் தலைமைக் கழக பேச்சாளர்கள் செல்வி சேலம் சுஜாதா, தக்கோலம் தேவபாலன் ஆகயோர் சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சி 14வது வார்டில் 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணி நடைபெற்றது. இதில் சிறுபான்மை நகர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி புதிய பொழுதுபோக்கு பூங்காவை அமைக்க பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி குறைகளை கேட்டு அறிந்தார். இதில் நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, நகராட்சி அதிகாரிகள் சாந்தி, ரங்கசாமி, நகர மன்றத் துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், நிர்வாகிகள் எஸ். சங்கர், பொன்.விமல், ஏ.ஜெ.பவுல், எம்.காந்தி, சத்தியகிரி, அ.க.நடராஜ், குமாரசாமி, சாது, குமார், கெஜா, பன்னீர்செல்வம், ஜெகன், மனோகரன், பி.வி.கே.கண்ணன், ஆசைத்தம்பி, என்.ராஜ், அப்பு (ஏ) ஜெபராஜ், ஆ.நாராயணன், மு.சுரேஷ், நரேஷ், குடியரசு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்

# வால்டாக்ஸ் சாலையில் 840 அடுக்குமாடி குடியிருப்புகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூலை 31-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (30.7.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய இரத்த சுத்திகரிப்பு மையம் (Kondithoppe Dialysis Centre), 840 புதிய குடியிருப்புகள் (840 Housing Tenements), புதிய சமூக நலக்கூடம் (Community Hall) மற்றும் விளையாட்டுத் திடல் (Play Ground) மேம்படுத்துதல் என "ஒருங்கிணைந்த வளாகம்", மூலக்கொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் இருக்கின்ற மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு யாரும் நினைத்து பார்த்திராத அளவிற்கு கனவு திட்டமாக இருந்ததை நினைவாகின்ற வகையில் இதே இடத்தில் கடந்த 2024 டிசம்பர் மாதம் 4ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட பணிகள் முன்னேற்றம் குறித்து இன்றைக்கு கள ஆய்வினை மேற்கொண்டோம். அந்த வகையில் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், மாநகராட்சி துணை ஆணையாளர் ரவி ஆகியோர் ஏனைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம். ஒரே இடத்தில் சொல்லுவார்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய பகுதி என்று அது போல் 700 குடியிருப்புகள் வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கின்ற மக்கள், சாலை ஓரம் வசிக்கின்ற மக்கள், கால்வாய் ஓரம் வசிக்கின்ற மக்களுக்கு 400 சதுர அடியும், ஒவ்வொரு வீடும் அமைக்கப்பட இருக்கின்றது.

இந்த 700 குடியிருப்புகள் பணி ஆரம்பிக்கப்பட்ட 8 மாத காலத்தில் விரைவுப் பணிகளாக 7 அடுக்கு தொட்டிருக்கின்றது. இதோடு சேர்த்து விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கப்பட இருக்கின்றது. அந்த விளையாட்டு மைதானத்தோடு இணைந்து ஒரு சமுதாய நலக்கூடம் ஒன்று உருவாக இருக்கின்றது. அதோடு இணைந்து டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்குண்டான சிகிச்சை நிலையம் போன்றவற்றிற்காக பிரத்யேகமாக ஒரு வடிவமைப்பு உருவாக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் இந்த 700 குடியிருப்புகளை தவிர்த்து, மேலும் கூடுதலான இடம் மாநகராட்சியிடம் இருந்ததை தெரிவித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் உத்தரவை பெற்று கூடுதலாக 140 வீடுகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வீடுகளை போன்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட இருக்கின்றது. ஆக மொத்தம் இங்கே 840 குடியிருப்புகள் உருவாக இருக்கின்றது. அதை நேரடியாக வந்து இங்கு கள ஆய்வினை மேற்கொண்டோம்.

ஒரே இடத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், திருமண மண்டபம், டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்கான சிகிச்சை மையம், அரசு அச்சகம் என 7 பணிகள் ஒரே வளாகத்திற்குள் நடைபெறுவது சென்னையில் முதல் முறையாக இதுவாக தான் இருக்கும். இந்த பணியை அதிவேகம் கொண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிட்டு தொடர்ந்து எங்களுடைய துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, எங்களுடைய உறுப்பினர் செயலாளர் பிரகாஷ், சென்னை பெருநகரத்தினுடைய மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், துணை ஆணையாளர் ரவி, பெருநகரத்தின் உடைய மேயர் திருமதி. பிரியா ஆகியோர் இந்த மாநகராட்சியின் உடைய மாமன்ற உறுப்பினர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து, தினந்தோறும் முன்னேற்றப் பணிகளை கண்காணித்து வருகின்றோம். இந்த பகுதியில் இந்த திட்டம் வருகின்ற பொழுது பெரிய வரப்பிரசாதமாக இந்த பகுதி அமையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர்கள் (சி.எம்.டி.ஏ.) மகாவிஷ்ணு, (TNUHDB) லால்பகதூர், கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், இளம்பருதி, மாநகராட்சி மண்டல நல அலுவலர் டாக்டர் சுப்ரியா, செயற்பொறியாளர் ராஜன்பாபு, சென்னை குடிநீர் வாரியம், மின்சாரத் துறை, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள்ஒதுக்கீட்டின்படி

# 699 மருத்துவ மாணவர்களுக்கு சிறப்பு பிரிவு ஒதுக்கீடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைகளை வழங்கினார்!

சென்னை, ஜூலை 31-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.07.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-26 ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் ஒதுக்கீடு, சிறப்பு பிரிவு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்கள்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மருத்துவக் கலந்தாய்வில் அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ஒவ்வொரு ஆண்டும் கலந்தாய்வு நடத்தி 7.5% சிறப்பு உள் ஒதுக்கீடு பிரிவு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்தாண்டு 494 எம்பிபிஎஸ் இடங்களுக்கும், 119 பல் மருத்துவ இடங்களுக்கும் ஆக மொத்தம் 613 இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு மாண வர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் அனைவருக்கும் தற்போது ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த 613 மாணவர்களின் குடும்பத்தினரும் ஏறத்தாழ 4000க்கும் மேற்பட்டோர் வருகை புரிந்து ஆணைகளை பெற்றுச் சென்றிருக்கிறார்கள். கலந்தாய்வில் கலந்து கொள்ள வந்த அனைவருக்கும் துறையின் சார்பில் உணவு போன்ற பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் இந்த கலந்தாய்வில் மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளும் தரப்பட்டிருக்கிறது. விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவப் பிரிவைச் சார்ந்த 11 பேருக்கும் ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 699 மாணவ, மாணவிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் 7.5% இடஒதுக்கீட்டை சட்டப்பூர்வமாக கொண்டு வந்து கடந்த 4.5 ஆண்டுகளாக சிறப்பு பிரிவு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதோடுமட்டுமல்லாமல் இந்த மாணவர்களுக்கு கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம், உணவுக்கட்டணம் உட்பட அனைத்துக் கட்டணங்களும் தமிழ்நாடு அரசே பொறுப்பேற்று முழுவதும் இலவசமாக இவர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழில்முறை படிப்புகளுக்கு 7.5% இடஒதுக்கீட்டை தொடர்ந்து செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

நீட் தேர்வு விலக்கு தொடர்பான கேள்விக்கு

நீட் தேர்விற்கு விலக்கு தரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் நீண்டகாலமாக சட்ட ரீதியாக போராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்ட பூர்வமான போராட்டம் மட்டுமல்ல தொடர்ந்து அனைத்து வகையான போராட்டங்களை நடத்தி நீட் தேர்விலிருந்து விலக்கு குறித்த நடவடிக்கைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். தேர்வு எழுதும் அனைவரும் மிகவும் சிரமப்பட்டு தான் தேர்வு எழுதி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களுக்கான அந்த பயிற்றுவித்தல் மையங்களையும் அரசே இலவசமாக நடத்தி வருகிறது. தனியார் மையங்களில் சென்று படித்தால் இலட்சகணக்கில் செலவாகும் என்பதையும் தாண்டி இலவச பயிற்று மையங்கள் நடத்தப்பட்டு அதன் மூலமாவும் பயிற்சி பெறுகிறார்கள். நீட் தேர்விற்கு விலக்கு என்பது தான் நமது முதலமைச்சர் அவர்களின் முதல் குறிக்கோள் ஆகும்.

நீட் தேர்வை கொண்டு வந்தது ஒன்றிய அரசு, அதனால் ஒன்றிய அரசு பிரதிநிதிகள் தமிழ்நாடு வரும் போது அவர்களிடம் பத்திரிக்கையாளர்களாகிய நீங்கள் கேட்க வேண்டும், நீட் தேர்விற்கு எப்போது விலக்கு பெற்றுத்தரப்படும் என்று. நீட் தேர்வு இங்கு வருவதற்கு காரணமாக இருந்த எடப்பாடி பழனிச்சாமி அவர்களை பார்த்து கேட்க வேண்டும். ஆனாலும் தமிழ்நாடு அரசு நீட் தேர்வு விலக்கிற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

நீட் தேர்வு விலக்கு நீதிபதி இராஜன் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றியது, அதையும் கவர்னர் அவர்கள் ஒப்புதல் தராமல் இருந்தது போன்ற அதன்பிறகு பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு ஆளுநர் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பியது, குடியரசுத் தலைவர் அவர்கள் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி, உள்துறை அமைச்சகம் வாயிலாக தமிழ்நாடு உயர்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஆயுஷ் நிர்வாகம், தொடர்ச்சியாக பல்வேறு விளக்கங்கள் கேட்டு 7 முறை தெளிவுரைகள் கேட்டு, சட்ட வல்லுநர்கள் மூலம் ஒவ்வொரு முறையும் அதற்கான விளக்கங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம். இத்தகைய நீட் விலக்கு நெடும்பயணம் தொடர்கிறது.

நீட் தேர்வு என்பது 2017 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது மட்டும்தான் கொண்டு வரப்பட்டது. அவருக்கு முன்பு அம்மையார் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது கொண்டு வரப்படவில்லை. அதற்கு முன்பு கலைஞர் முதலமைச்சராக இருந்தார் அப்போதும் கொண்டு வரப்படவில்லை. எடப்பாடி பழனிச்சாமி ஒன்றிய அரசிடம் இணக்கமாக இருந்தபோது இந்த சட்டத்தை கொண்டு வர ஒப்புதல் வழங்கினார். மேலும் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்த பிறகு 7.5% என்பது கொண்டு வரப்பட்டது. இந்த இடஒதுக்கீடு அனைத்து கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் கொண்டு வரப்பட்டது. இந்த இடஒதுக்கீட்டு சட்ட மசோதாவிற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் தராமல் இருந்து, பிறகு இன்றைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆளுநர் மாளிகை முன்பு மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தி பெரிய மக்கள் போராட்டம் நடத்தப்பட்டது. பிறகு தான் 7.5% இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரப்பட்டது.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, துணை இயக்குநர்கள் மரு.கராமத், மரு. சாந்தினி, மரு.ஷீபா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## தூத்துக்குடி தெற்கு மாவட்ட அமைப்பாளர் மற்றும் சமூக வலைதள பொறுப்பாளர் நியமனம்!

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி டி.ஆரோக்கிய மேரி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **திருமதி வி.தயாநிதி** (159/5, சக்தி விநாயகர் காலனி, குமாரபுரம், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் - 628 215.) அவர்கள் **தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளராக** நியமிக்கப்படுவதோடு;

மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட எம்.சுஜிப்ரீதி ஜாய் அவர்கள் சரிவர கழக பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திருமதி ஆர்.சரோஜினி**, பி.ஏ., பி.எட்., (6/51, கிழக்கு தெரு, இடையர்காடு, தூத்துக்குடி மாவட்டம் - 628 802.) அவர்கள் **தூத்துக்குடி தெற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக** நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 30-07-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

### வழக்கறிஞர் ச.அற்புதராஜ் முன்னிலை! முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

# புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்-நலத்திட்ட உதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்! சேலம் சுஜாதா – தக்கோலம் தேவபாலன் சிறப்புரை!

சென்னை, ஜூலை 31 -

சென்னை வட கிழக்கு மாவட்டம் புழல் ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் வழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் 29.07.2025 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு ஆஷா கல்வி நாதன், ப.சிவகுமார், பி. கல்வி நாதன், வே.முரளி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

புழல் ஒன்றிய கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ச.அற்புதராஜ் முன்னிலை வகித்தார்.

விழாவில் சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநில பிரச்சாரக் குழு செயலாளர் செல்வி சேலம் சுஜாதா, தலைமைக் கழகப் பேச்சாளர் தக்கோலம் தேவபாலன் ஆகியோர் சிறப்புரையாற்றி னர்.

இதில் டி.ராமகிருஷ்ணன், இரா.முருகன், மு. ரமேஷ், ஜே. முருகன், வி.பாரதி, மா.மணி, பி.சரவணன், ஆர்.இ.ஆர்.விப்ர நாராயணன், திராவிட மணி, பி.கமலக்கண்ணன், ஜெ.கபிலன், டி.ஆர்.சாம், ஏ.ஆனந்தன், எ.சரஸ்வதி, எஸ்.குணசேகரன், எ.டில்லி பாபு, பிரேமலதா, மனோகரன், ஆர். ஸ்டாலின், உதயகுமார், எம்.தனசேகர், ஜி. முரளி, ஜி.சேகர், பி.பாஸ்கரன், எஸ்.சங்கர், சி.மதுரை முத்து, வி.பார்த்திபன், எம். சுப்பிரமணி, கே.மனோஜ் குமார்,

ஜி.ராஜ்குமார், ஆதி முருகன், எம்.சீனிவாசன், எம். டி.சி.சுகுமார், கே.ஈஸ்வரி, ஆதி வெங்கட், பி.கே.பக்கிரி, தே.ரா.அருண்குமார், கே. அருள், என்.தேவானந்தம், எஸ்.யுவராஜ், எம். குறளரசன், சி.அஸ்வின், எ.தினேஷ், ஆர்.ஐயப்பன் மற்றும் கிளைக் கழக செயலாளர்கள், மற்றும் BLA2. BDA, BLC மற்றும் பல்வேறு மாவட்ட அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் தொகுதி 99வது வார்டில் குளியலறை!

## பரிதி இளம்சுருதி எம்.சி. திறந்து வைத்தார்

சென்னை, ஜூலை 31 -

எழும்பூர் தொகுதி 99-வது வார்டு ஓட்டேரி திடீர் நகரில் புதியதாக கட்டப்பட்ட கழிப்பிடங்களை கழக அயகல அணி துணைச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான பரிதி இளம்சுருதி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு ஆலோசனைப்படி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட ஓட்டேரி திடீர் நகர் பகுதியில், பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் இரண்டு பொது கழிப்பிடம், இதில் 16 ஆண்கள் கழிப்பறை, 5 குளியல் அறை மற்றும் 16 பெண்கள் கழிப்பிடம், 5 குளியல் அறை, மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வண்ணம் இரண்டு கழிப்பிடத்தை, 8வது மண்டல அலுவலர் கே.சுந்தர்ராஜன் முன்னிலையில், தி.மு.க அயலக மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்,

இதில் உதவி செயல் பொறியாளர் ஏ.சுரேஷ் பாபு, 99வது வார்டு கோட்ட பொறியாளர் கே.சிவகுமார், துப்புரவு ஆய்வாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி , மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் பொதுமக்கள் உடனிருந்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, புழல் 23வது வட்ட துணை செயலாளர் டி.ராஜாராம் ஏற்பாட்டில், பாகம் 249இல், சக்திவேல் நகர் பகுதியில், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது, இதில் வட்டச் செயலாளர் பி.எஸ்.சந்துரு, சுதர்சிங், ரவி, பகுதி மகளிர் அணி சகிலா, blc நீர்மல், வி, தோஸ், bda ஜெகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



இராயபுரம் 52வது வட்டத்தில் உள்ள செட்டி தோட்டத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆய்வு மேற்கண்டார். மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், வட்ட செயலாளர் புகழேந்தி , வாரியம் அதிகாரிகள், மாவட்ட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.